

• தொடரும் தேவதாசி முறை • நீதிமன்றங்களுக்கு விடுமுறை தேவையா ? •

Rs.25/-

# லாயர்ஸ் லைன்

Vol: III - Issue: 31 - June : 2014 www.lawyersline.net




## பாலுணர்வை தூண்டும் விளம்பரங்களுக்குத் தடை

உச்சநீதிமன்ற தீர்ப்பு

தொடரும் கருவறைக் கொலைகள்...

தானப்பத்திரம் எழுதுவது எப்படி

வாரிசுரிமைச் சட்டம் ஒரு விளக்கம்



R.கிருஷ்ணமூர்த்தி
M.A(police administration). B.L

தானப்பத்திரம் (Gift Deed) எழுதி பதிவு செய்யும் போது முத்திரை தீர்வு (Stamp Duty) யை கட்ட வேண்டும் என முத்திரை சட்டம் *1899* சொல்கிறது. இந்த Stamp Duty இந்தியாவில் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடுகிறது.

தானப்பத்திரம் (Gift Deed) மனைவிக்கோ, பெற்றோருக்கோ அசையா சொத்துக்களை எழுதிக் கொடுக்கும் போது அதற்கு வருமான வரி கட்டத் தேவையில்லை என வருமான வரித்துறைச் சட்டம் *1961* சொல்கிறது.

தானப்பத்திரம் (Gift Deed) எவ்வாறு எழுத வேண்டுமென்றால் தானப்பத்திரம் எழுதியவரும். எழுதி வாங்குபவரும், இரண்டு சாட்சிகளின் முன்னால் கையெழுத்திட வேண்டும் சாட்சிகளும் கையெழுத்திட மற்றும் முகவரியையும் தெளிவான எழுத வேண்டும். ஒருமுறை (Gift Deed) தானப்பத்திரம் எழுதிவிட்டால் அதை மாற்ற எழுதியவருக்கு உரிமையில்லை. ஆனால் ஒரு சில காரணங்களால் தான பத்திரத்தை மாற்றி விடலாம். அதாவது புத்தி சுவாதீனம் இல்லாமல் இருக்கும் போதோ (அ) புத்தி சுவாதீனம் இல்லாமல் இருப்பவர்களிடமிருந்தோ (அ) பதினெட்டு வயதுக்கு உட்பட்டு இருக்கும் குழந்தைகளிடமிருந்தோ (Minor) தானப்பத்திரம் (Gift Deed) எழுதி வாங்கியிருந்தால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, ஆதாரங்களோடு நீதிமன்றத்தில் நிரூபித்த பின்னர் மதிப்பு மிகு நீதிமன்றம் தானப்பத்திரம் செல்லாது என தீர்ப்பு வழங்கும்.





**SUBSCRIBE NOW!**

**LAWYERS LINE**

**(லாயர்ஸ் லைன் சந்தா படிவம்)**

**SUBSCRIPTION** **POSTAL CHARGES FREE**

| YEARS | ISSUES | RATE | OFFERS | YOUR PRICE |
|---|---|---|---|---|
| Patron | Life | Rs.15000 | 30% | Rs.10500 |
| 5 Years | 60 | Rs.1500 | 10% | Rs.1350 |
| 3 Years | 36 | Rs.900 | 5% | Rs.855 |
| 1 Years | 12 | Rs.300 | 0% | Rs.300 |

YES, I' D LIKE TO SUBSCRIBE TO LAWYERS LINE

☐ 1 Year ☐ 3 Years ☐ 5 Years ☐ Patron

PERSONAL INFORMATION

NAME : ...........................................................

S/o : ...........................................................

Tel : .......................................... Mobile: ...........................

Email : ...........................................................

Occupation : ...........................................................

Age : .................................... D.O.B. ...........................

DELIVERY ADDRESS

...........................................................

...........................................................

...........................................................

PAYMENT METHOD

By Cheque/D.D./M.O (Payable to LAWYERS LINE, Chennai)

☐ Cheque / ☐ D.D. / ☐ M.O.

Deposit Directly to the Bank

Bank Name: Indian Overseas Bank, K.K.Nagar Br., Chennai
Account Name : LAWYERS LINE
Account Number : 149202000000797
(After Deposit, Call 9841607006 to get confirmation)

**LAWYERS LINE**

72/3, Anand Appartments, Ground Floor,
100 Feet Road, Vadapalani, Chennai - 600 026.
Telephone : 044- 23650044, 9841607006
Email : lawyerslineguna@gmail.com
Web: www.lawyersline.net

# -தானப் பத்திரம்

## எழுதுவது எப்படி?-ஒரு சட்ட விளக்கம்



பண்டைய காலத்திலிருந்தே நாம் இந்திய நாட்டில் தானம் கொடுப்பது ஒரு பழக்கமாக கடைபிடித்துக் கொண்டு வருகிறோம். ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துவதாலும், திருமண காலங்களிலும், பிறந்த நாள் விழாக்களிலும் பல்வேறு வகையான பொருள்களையும், ஆடு மாடுகளையும், ஆடை, ஆபரணங்களையும், சொத்துக்களையும் காலங்காலமாக நாம் தானம் கொடுப்பது என்பது பழக்கம். நம் இரத்தத்தில் ஊறிபோனது.

இவ்வாறு தானம் கொடுப்பதால், குடும்பத்தில் உள்ளவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பல சிக்கல்கள் வந்தன. இச்சிக்கல்களை தீர்க்க (அ) நெறிமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அசையும் சொத்துக்களை (Movable Properties) மற்றும் அசையா சொத்துக்களை (Immovablie Properties) தானம் செய்யும் போது சட்டச் சிக்கல்கள் வராமல் இருக்க வேண்டும் என்றால் சில சட்ட நுணுக்கங்களை எப்போது நாம் கையாள வேண்டுமென்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நாம் சுயமாக சம்பாதித்த அசையும் மற்றும் அசையா சொத்துக்களையோ (அ) மூதாதையர் மூலமாக கிடைத்த சொத்துக்களையோ, தாமாக முன்வந்து நாம் விரும்பும் பேருக்கோ (அ) பொது பயன்பாட்டிற்கோ தானமாக கொடுக்கும் பட்சத்தில் எந்தவித பணபரிமாற்றமும் நிகழ்வது இல்லை. அதேபோல் சொத்தின் மீது நமக்குள்ள உரிமைகளை நாம் விரும்பும் நபருக்கோ (அ) பொதுப்பயன்பாட்டிற்கோ தான பத்திரம் (Gift Deed) மூலமாக எழுதிக் கொடுக்கலாம்.

தானப் பத்திரம் எழுதும் போது முழுமன நிலையோடும் யாருடைய தூண்டுதலும், கட்டாயமும் இல்லாமல் தானப்பத்திரம் எழுதினால் தான் செல்லுபடியாகும். அதேபோல் தானப் பத்திரத்தை புத்திசுவாதீனம் இல்லாதவர்கள். வயது வராதவர் அதாவது Minor தானப்பத்திரம் (Gift Deed) எழுதினால் சட்டத்தின் முன் செல்லுபடியாகாது.

அசையும் சொத்துக்களை (Movable Properties) அதாவது தங்கத்தினால் ஆன பொருட்களை, பேனா, புத்தகம், வீட்டுக்கு தேவையான பொருட்கள் மற்றும் இதர அசையும் பொருட்களை விழாக்களின் போதும், திருமணகாலங்களின் போதும் தானம் கொடுப்பது நமது நாட்டு வழக்கம். ஒரு மாணவர் நன்றாக படித்து நல்ல மதிப்பெண்கள் எடுத்தால் அவர்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து உற்சாகப்படுத்துவதும் பிறந்த நாள் காலங்களில் Gift–ஆக ஆடை அணிகலன்களையும், தங்கத்திலான பொருட்களையும் மற்றும் இதரப் பொருட்களையும் வாங்கிக் கொடுத்து மகிழ்ச்சியாக கொண்டாடுவதும் அன்றாட வாடிக்கையாகி விட்டது.

தற்போது திருமணநாள் வருடாவருடம் திருமணநாள் கொண்டாடப்படுகிறது. அப்பொழுது மனைவியின் மீது கணவனுக்கும், கணவன் மீது மனைவிக்கும் ஏற்படும் காதலால் ஒருவரை ஒருவர் சந்தோஷப்படுத்த தானமாக பொருட்களை வாங்கி கொடுப்பதும் நம்முடைய பழக்கமாகிவிட்டது.

இப்போது அசையும் பொருட்களை (Movable Properties) தானமாக கொடுக்கும் போது பதிவு செய்ய தேவையில்லை என்று பதிவுத்துறை சட்டம் *–1908* சொல்கிறது. அதே சமயத்தில் விலை உயர்ந்த அசையும் சொத்துக்களை (Movable Properties) தானமாக கொடுக்கும் போது தானம் செய்பவரும், தானம் வாங்குபவரும் விருப்பப்பட்டால் தானம் செய்யும் பொருட்களை ஆவணமாக எழுதி பதிவுச் செய்து கொள்ளலாம். எனவும் பதிவுத்துறை சட்டம் சொல்கிறது. அப்படி என்றால் அசையும் சொத்துக்களை (Movable Properties) தானமாக கொடுப்பதை கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என பதிவுத் துறைச்சட்டம் சொல்லவில்லை.

ஆனால் அசையா சொத்துக்களை (Immovable Properties) நாம் உறவினர்களுக்கோ (அ) மூன்றாம் நபர்களுக்கோ (அ) கோயில்களுக்கோ (அ) பொதுப் பயன்பாட்டிற்கோ தானப்பத்திரம் (Gift Deed) மூலம் எழுதிக் கொடுக்கலாம். இவ்வாறு அசையாச் சொத்துக்களை (Immovable Properties) Giftdeed- தானப்பத்திரமாக எழுதும் போது பிரிவு *17*ன் கீழ் கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமென பதிவுத்துறை சட்டம் *1908* சொல்கிறது.